நிலைகளை இந்த அரசு எவ்விதம் உருவாக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தாமாக என்னென்ன தொழில்களைச் செய்வதற்கு முன் வருகிறார்களோ அத்தனைத் தொழில்களுக்கும் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சிறந்த வழிகாட்டுதலில், கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனைப் பெற்றுக் கொடுப்பதற்கு தயார் நிலைமையில் இருக்கிறது என்கிற தகவலைச் சொல்லி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாநில சர்க்கார், மாவட்டத்திலே P.O. மூலமும், TAHDCO மூலமாகவும் ஒரு விழுக்காட்டை loan-ஆக வழங்கி, மானியம் வழங்குகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல்வேறு கருத்துகள் இன்று இதன்மீது ஏற்பட்டபோது, எந்த ஆண்டு சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன இந்தியாவில் என்ற கேள்விக்கு இதுவரையில் அமைச்சர் பதில் சொல்லவில்லை. மறைந்த தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் 1988 ஆம் ஆண்டு இந்தியாவிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்திலே இது போன்ற விவாதங்களை அனுமதிக்க முடியாது.

வினா எண் 7, திரு. கோவை தங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. போளூர் வரதன்: சார், கேள்வியைக் கேட்க விடுங்கள் சார். கேள்வியைக் கேட்க விடுங்களேன். இதிலே என்ன இப்போது பிரச்சினை?

7—

நவீன சுகாதார வளாகம்

***45664—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2005 செப்டம்பர் 22]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை திருக்கோயிலுக்கு நவீன முறையில் சுகாதார வளாகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயிலில் தற்போது ரூ.198 இலட்சம் செலவில் இராஜகோபுரம் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்ற பின் திருக்கோயிலின் தோற்றத்தன்மை மாறிவிடும். அதன் பின்னர் தோற்றத்திற்கு ஏற்றார்போல் குளியலறை மற்றும் கழிவறை கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களின் தொகுதி தொண்டாமுத்தூர் தொகுதி. இந்தத் தொகுதியில் அருள்மிகு மருதமலை திருக்கோயில் அமைந்துள்ளது. அருள்மிகு மருதமலை திருக்கோயில் மிகவும் பிரசித்திப்பெற்ற திருக்கோயிலாகும். விசேஷ காலங்களில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து செல்லுகின்ற பகுதி. அப்பொழுது பொதுமக்களுக்குக் கழிப்பிட வசதி இல்லாததால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் அடிவாரத்திலே சமுதாயக் கூடம், குடிநீர்த் தொட்டி கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், மேற்பகுதியிலே கட்டுவதற்கு விதி இல்லை என்பதால், அரசே பொறுப்பேற்று நவீன சுகாதார வளாகம் கட்டுவதற்கு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும், திரு. எஸ்.ஆர்.பி.-யும் சேர்ந்தே கட்டியிருக்கலாம். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு முடி காணிக்கை செலுத்துமிடத்திற்குப் பின்புறமாக ஆண்களுக்கு 8 கழிவறைகளும், பெண்களுக்கு

8-கழிவறைகளும் மற்றும் 2 குளியல் அறைகளும் தற்சமயம் உள்ளன. இக்கழிவறைகளும், குளியலறைகளும் மகளிர் சுய உதவிக் குழுவினரால் இன்றைக்கு சேவை பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. கழிவறை வசதிகளை மேம்படுத்தவும் அவற்றைச் சீரமைக்கவும் 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிதாகக் கழிவறைகள் கட்டுவதற்கும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதி, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஏழையெளிய கூலித் தொழிலாளர்கள் மிகுந்திருக்கின்ற தொகுதி. வால்பாறையிலேயே அருள்மிகு சுப்பிரமணிய திருக்கோயில், வால்பாறை முடீஸ் அருள்மிகு சுப்பிரமணிய திருக்கோயில், சேத்துமடை அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் திருக்கோயில், வேட்டைக்காரன்புதூர் அளுக்குச் சாமியார் திருக்கோயில் போன்ற கோயில்களிலும் கழிப்பிட வசதி செய்துதர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம், இதற்கெல்லாம் தனிக் கேள்வி போட வேண்டும். திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே இருக்கின்ற மருதமலை ஆண்டவர் திருக்கோயிலைப் போல அதற்கு அருகிலே இருக்கின்ற வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் ஆலயம் போன்ற கோயில்கள் எல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களாகும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாவற்றுக்கும் தனிக் கேள்வி போடுங்கள். வினா எண் 8, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

8—

சத்துணவுக் கூடங்கள்

***19157—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—